Persatuan Pengguna Pulau Pinang
Consumers Association of Penang
槟城消费人协会 பினாங்கு பயனீட்டாளர் சங்கம்
10 Jalan Masjid Negeri, 11600 Pulau Pinang, Malaysia
Tel: 604-8299511 Fax: 604-8298109
email: consumerofpenang@gmail.com

Websites
Bahasa:
www.pengguna.org.my
English:
www.consumer.org.my
Chinese:
www.cap.org.my

பத்திரிகை செய்தி 07-08-2020

# வேப் புகைத்த வெளியுறவு அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். நாடாளுமன்ற பண்பு காப்பாற்ற பட வேண்டும். பினாங்கு பயனீட்டாளர் சங்கம் வேண்டுகோள்

கடந்த வியாழன் நாடாளுமன்றம் நடைபெற்ற போது, வெளியுறவுத்துறை அமைச்சர் வேப் புகைத்தது தொடர்பாக அவர் மீது கட்டாயமாக அபராதம் விதிக்கவ வேண்டும் என பினாங்கு பயனீட்டாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில். புகைபிடிப்பது முழுவதுமாக தடை விதிக்கப்பட்டுள்ளது. விதிமுறைகள் உள்ளன என அச்சங்கத்தின் கல்வி பிரிவு மற்றும் புகையிலை எதிர்ப்பு இயக்க அதிகாரி என் வி சுப்பாராவ் தெரிவித்தார்.

தேர்வு செய்யப்பட்ட ஒரு நாடாளுமன்ற உருப்பினர் மற்றும் அனுபவம் வாய்ந்த ஒரு மூத்த அமைச்சர், இது போன்ற சட்டத்திற்கு எதிரான ஒரு செயலை அதுவும் நாடாளுமன்ற அவையில் மேற்கொண்டது மிக பெரிய தவறான செயலாகும் என்றார் அவர். தன் செயலுக்கு மன்னிப்பு கோரியுள்ள அமைச்சர், இதுதான் முதல் முறையாக வேப் புகைப்பதாக காரணம் சொல்லியிருக்கிறார்.

இக்காரணம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூரிய சுப்பாராவ், அமைச்சருக்கு கண்டிப்பாக அபராதம் விதிக்க வேண்டும் என்றார்.

விதியை மீறுபவர்களுக்கு 500 வெள்ளி வரை கமாவுண்ட் விதிக்கப்படும் அல்லது 10,000 வெள்ளிக்கு மேல் அபராதம் அல்லது இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனை யும் விதிக்கப்படலாம் என நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் அதே நாடாளுமன்றத்தில், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அவர் ஆதரித்த சட்டத்தை மதிக்காமல், நடந்து கொண்டது நகைச்சுவையாக இருப்பதாக சுப்பாராவ் கூறினார்.

சட்டம் அனைவருக்கும் சமம். யாராக இருந்தாலும் பாரபட்சம் பார்க்காமல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சுப்பாராவ் வேண்டுகோள் விடுத்தார்.

என் வி சுப்பாராவ்
கல்விப் பிரிவு அதிகாரி
பினாங்கு பயனீட்டாளர் சங்கம்